# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2132/05 - 2019 ජූලි මස 17 වැනි බදාදා - 2019.07.17

***2132/05 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை***

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 223 வித்தகபுரம் கிராம அலுவலர் பிரிவில் தெல்லிப்பளை தென்மேற்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.06.30 ஆம் திகதிய வைஏ/ரீஎல்எல்/ 2018/ 40 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு ஏ எனக் காட்டப்பட்ட சுமார் 0.0312 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்துள்ள காணித் துண்டு :

*01.* **துண்டு ஏ - நீலாவத்தையும் கட்டுக்கும்பலையும் - விஸ்தீரணம்: 0.0312 ஹெக்டயார்**

வடக்கு : நீலாவத்தையும் கட்டுக்கும்பலைத் தோட்டம் மயில்வாகனம் தேவாம்பிகையின் ஆதனம் ; கிழக்கு : நீலாவத்தையும் கட்டுக்கும்பலைத் தோட்டம் வைத்தீஸ்வரன் குணாளனின் ஆதனம் ; தெற்கு : வீதி (பிரதேச சபை) ; மேற்கு : வீதி (பிரதேச சபை).

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/5/2018/எச்ஏ/15.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர', ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019, மே 23.

07 - 976